கிருதுமால் நதித் திட்டம்

*607 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், கிருதுமால் நதித் திட்டத்தினை தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இத்திட்டத்தினைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

விஸ்வகுடி, வெங்குளம் கிராமங்களுக்கு பாசன வசதி

*608 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, விஸ்வகுடி கிராம மக்களுக்கும், வெங்குளம் கிராம மக்களுக்கும் இடையில் பாசன தண்ணீர் சம்பந்தமாக அண்மையில் கலவரம் ஏதும் நிகழ்ந்ததா?

(இ) ஆம் எனில் எதிர்காலத்தில் இவ்விதத் தகராறு ஏற்படா வண்ணம் இவ்விரு கிராமங்களுக்கும் பயன்படும் பாசனத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இத்தகைய கலவரம் 8-1-1972 அன்று நடைபெற்றது.

(இ) வெங்கலம் ஏரியின் ஆயக்கட்டுத்தாரர்களின் நலனைப் பாதிக்காத வகையில், விஸ்வகுடி கிராமத்தில் பல ஆண்டுகளாக பாசனமாகும் நிலங்களுக்கு மட்டும் பாசனத்திற்குத் தேவையான அளவு தண்ணீர் வழங்க ரூ. 2,550 செலவில் நிரந்தரமான குழாய் மதகினை விஸ்வகுடி எல்லையில் அமைத்துக் கொடுக்குமாறு மேற்பார்வைப் பொறியாளரை பாசனத் தலைமைப் பொறியாளர் அறிவுறுத்தியுள்ளார்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: விஸ்வகுடி கிராம மக்கள் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தும்போது வெங்கலம் கிராமத்தார் தாங்கள் பாதிக்கப்படுகிறோம் என்று கூறி கலகம்

1973 டிசம்பர் 4]

செய்கிறார்கள். இரு தரப்பாருக்கும் பயன்படும் முறையில் பெரிய ஏரி வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பச்சை மலைத் தண்ணீரில் அப்படி ஒரு பெரிய திட்டத்தை வகுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விஸ்வகுடி கிராமத்தில் பல ஆண்டுகளாக 40 ஏக்கர் நிலத்தில்தான் சாகுபடி செய்து வந்தார்கள். அதற்கு மேல் சாகுபடிக்கு நீர் கொடுக்க முடியாது. கீழ் இருக்கும் வெங்குளம் கிராமத்தார் ஆயக்கட்டு பாதிக்கப்படும் அளவுக்கு அவர்கள் தண்ணீர் எடுக்கிறார்கள். கீழ் இருக்கும் ஆயக்கட்டுதாரர்கள் பாதிக்கப்படாத அளவிலே விஸ்வகுடி கிராமத்தாருக்கு 40 ஏக்கர் சாகுபடிக்கு மட்டும் நீர் கிடைக்கும் முறையிலே புதிய ஏற்பாட்டைச் செய்து குழாய் மதகைப் போட தலைமைப் பொறியாளர் ஆணை பிறப்பித்திருக்கிறார். அதுவே போதும் என்று அரசு கருதுகிறது.

கீழ் கொள்ளிடம் அணை

***609 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ் கொள்ளிடம் அணையை சீர்படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: கீழ் அணையைக் கட்டி நீண்ட ஆண்டுகள் ஆகின்றன. அடிக்கடி பழுது எற்படுவதாகச் சொல்லப்படுகிறது. சீர்படுத்துவதற்குப் பரிசீலனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பழுதுபட்டிருப்பது அங்கிருக்கும் 'ஷட்டர்ஸ்' கதவுகள்தான். புதுப்பிக்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அடுத்த ஆண்டு கதவுகள் பொருத்தப்படும்